RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 135 | மே.21, 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு அரசு இழப்பீடு வழங்க டிடிவி தினகரன் வலியுறுத்தல்



சென்னை: மே.21-

டெல்டா மாவட்டங்களில் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கி சேதமடைந்துள்ளன. உரிய ஆய்வை மேற்கொண்டு உடனடியாக இழப்பீடு வழங்கி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும் என அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "தஞ்சாவூர், கடலூர், மயிலாடுதுறை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் பெய்த தொடர் மழையால் அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கி சேதமடைந்திருப்பதாக ஊடகங்களிலும், நாளிதழ்களிலும் செய்திகள் வெளியாகியுள்ளன.

அதேபோல, விழுப்புரம், செங்கல்பட்டு, ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களில் போதுமான பாதுகாப்பின்றி அடுக்கி வைக்கப்பட்டிருந்த பல்லாயிரக்கணக்கான நெல் மூட்டைகளும் மழைநீரில் நனைந்து வீணாகியிருக்கும் செய்திகளும் மிகுந்த வேதனையை அளிக்கிறது.

ஏக்கருக்கு சுமார் 30 ஆயிரம் ரூபாய் முதல் 50 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்து சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர்கள் விவசாய நிலங்களிலும், நெல் கொள்முதல் நிலையங்களிலும் எவ்வித பயனுமின்றி சேதமடைந்து கிடப்பது விவசாயிகளின் வாழ்வாதாரத்தை கடுமையாக பாதிப்படையச் செய்திருக்கிறது.

எனவே, தொடர் மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களின் விவரங்களை கணக்கிட்டு அதற்கான இழப்பீட்டை உடனடியாக வழங்குவதோடு, விவசாயிகள் அரும்பாடுபட்டு விளைவித்த நெற்பயிர்களை நெல் கொள்முதல் நிலையங்களில் பாதுகாப்பான முறையில் சேமித்து வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வேளாண்மைத் துறையையும் தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

## காவல், சிறைத் துறை சார்பில் ரூ.668.71 கோடி மதிப்பில் புதிய கட்டிடங்கள்: முதல்வர் அடிக்கல் நாட்டினார்



சென்னை: மே.21-

காவல், சிறைத் துறை சார்பில் ரூ.668.71 கோடி மதிப்பில் கட்டப்பட உள்ள புதிய கட்டிடங்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

இதுகுறித்து தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: மாநிலத்தின் அமைதியைப் பேணிப்காத்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் காவல் துறையின் பணிகள் சிறக்க, புதிய காவல் நிலையங்கள், காவலர் குடியிருப்புகள் கட்டுதல், "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் காவலர்களுக்கு குடியிருப்புகள், பாதுகாப்புப் பணிகளுக்காக ரோந்து வாகனங்களை கொள்முதல் செய்தல், காவல் துறையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

திமுக அரசு பொறுப்பேற்றது முதல் காவல் துறையின் உட்கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் ரூ.509.49 கோடியில் 3,051 காவலர் குடியிருப்புகள், ரூ.59.75 கோடியில் 51 காவல் நிலையக் கட்டிடங்கள், ரூ.122.40 கோடியில் 18 காவல் துறை இதரக் கட்டிடங்கள் மற்றும் "உங்கள் சொந்த இல்லம்" திட்டத்தின் கீழ் ரூ.55.19 கோடியில் 253 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

காவல் துறை சார்பில் சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் ரூ.380.98 கோடியில் 896 காவலர், தலைமைக் காவலர் குடியிருப்புகள் மற்றும் கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் ரூ.76.15 கோடியில் 222 காவலர் குடியிருப்புகள் என மொத்தம் ரூ.457.14 கோடியில் கட்டப்பட உள்ள 1,118 காவலர் குடியிருப்புகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று காணொலி வாயிலாக அடிக்கல்நாட்டினார்.

கோவை மத்திய சிறைச் சாலையில் நிலவும் இடநெருக்கடியை கருத்தில் கொண்டு, சிறைத் துறை சார்பில் கோவை பிளிச்சி பகுதியில் முதல்கட்டமாக ரூ.211.57 கோடியில்ஆண்கள் சிறை, 111 சிறைக்காவலர் குடியிருப்புகள், கான்கிரீட் சாலை மற்றும் மதில் சுவர் ஆகியவற்றுக்கும் முதல்வர் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலர் நா.முருகானந்தம், உள் துறைச் செயலர் தீரஜ் குமார், டிஜிபி சங்கர் ஜிவால், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் சைலேஷ்குமார் யாதவ், சிறைத் துறை தலைமை இயக்குநர் மகேஷ்வர் தயாள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## ''வீட்டு மின் இணைப்புகளுக்கு எவ்வித கட்டண உயர்வும் இல்லை''

### மின்துறை அமைச்சர் சிவசங்கர் தகவல்



சென்னை: மே.21-

வீட்டு மின் இணைப்புகளுக்கு எவ்வித மின் கட்டண உயர்வும் இல்லை என்றும், அனைத்து இலவச மின்சாரச் சலுகைகளும் தொடரும் என்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "கடந்த சில நாட்களாக செய்தி ஊடகங்களில் மின் கட்டண உயர்வு குறித்து அதிகாரபூர்வமற்ற தகவல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. இது குறித்து பின்வருமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. தற்சமயம் மின் கட்டண உயர்வு குறித்து எவ்வித ஆணையும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினால் வெளியிடப்படவில்லை.

எனினும் ஒழுங்குமுறை ஆணையம், மின்கட்டணம் தொடர்பான ஆணை வழங்கிடும்போது, அதனை நடைமுறைப் படுத்துகையில் வீட்டு மின் நுகர்வோர்களுக்கு எவ்வித மின் கட்டண உயர்வும் இருக்கக் கூடாது எனவும், தற்போது வழங்கப்படும் அனைத்து இலவச மின்சாரச் சலுகைகளும் தொடர வேண்டும் எனவும் முதல்வர் அறிவுறுத்தியுள்ளார் என்று போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்துள்ளார்" என குறிப்பிடப்பட்டுள்ளது.

மின் கட்டண உயர்வு சலசலப்பு ஏன்? தமிழகத்தில் 3 கோடிக்கும் அதிகமான மின் இணைப்புகள் உள்ளன. இவற்றுக்கான மின்சாரத்தைக் கையாளும் மின் வாரியத்தின் இழப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் 2022ல் மின் கட்டணம் 30 சதவீதத்துக்கு மேல் உயர்த்தப்பட்டது. மேலும், 202627 வரை ஆண்டுதோறும் ஜூலை 1ம் தேதி முதல் மின் கட்டணத்தை உயர்த்தவும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அனுமதி வழங்கியது. அதன்படி, கடந்த 2023 ஜூலையில் 2.18 சதவீதம் கட்டணம் உயர்த்தப்பட்டது. 2024ம் ஆண்டு 4.83 சதவீதம் உயர்த்தப்பட்டது. அதில், வீடுகளுக்கான கட்டண உயர்வை தமிழக அரசு ஏற்றது.

இதன் தொடர்ச்சியாக, இந்த ஆண்டும் 6 சதவீதம் அல்லது ஏப்ரல் மாத பணவீக்க விகிதம் ஆகிய இரண்டில் எது குறைவோ, அந்த அளவுக்கு கட்டணம் உயர்த்தப்பட வேண்டும். இதன்படி, 3.16 சதவீதம் அளவுக்கு மின்கட்டணம் உயர்த்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக தகவல்கள் வெளியாகின. இந்த உயர்வு ஜூலை 1ம் தேதி முதல் அமல்படுத்தப்பட வாய்ப்பு இருப்பதாகவும், இந்தக் கட்டண உயர்வு வீடுகள், வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகளுக்கு அமல்படுத்தப்பட உள்ளதாகவும் கூறப்பட்டது.

இதுகுறித்து மின்வாரிய அதிகாரிகளிடம் கேட்டபோது, "மின்கட்டண உயர்வு குறித்து தமிழக அரசு இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை. எனினும், மத்திய அரசின் உதய் மின் திட்டத்தில் தமிழக அரசு கையெழுத்திட்டு இருப்பதால், 2027 வரை ஆண்டுதோறும் ஜூலை மாதம் மின் கட்டணத்தை உயர்த்த வேண்டும்" என்றனர். இந்தப் பின்னணியில், வீட்டு மின் இணைப்புகளுக்கு எவ்வித மின் கட்டண உயர்வும் இல்லை என்றும், அனைத்து இலவச மின்சாரச் சலுகைகளும் தொடரும் என்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.




■ மதுரை மாநகராட்சி மண்டலம் 5 (மேற்கு) அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாமில் மேயர் இந்திராணி பொன்வசந்த் அவர்கள் பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்றுக்கொண்டார் அருகில் மண்டலத் தலைவர் சுவிதா , துணை ஆணையாளர் ஜெய்னுலாபுதீன் , நகர்நல அலுவலர் மரு.இந்திரா மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## ''பொய்யின் விளைவை இப்போதாவது ஸ்டாலின் உணர்வாரா?'' : இபிஎஸ் ஆதங்கம்

சென்னை: மே.21-

நீட் தேர்வு அச்சம் காரணமாக சேலம் அருகே மாணவர் ஒருவர் தற்கொலை செய்துகொண்டுள்ள நிலையில், "ஒரு பொய்யின் விளைவு என்ன என்பதை இப்போதாவது ஸ்டாலின் உணர்வாரா?" என்று எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பி உள்ளார்.

இது தொடர்பாக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "சேலம் சூரமங்கலம் அருகே உள்ள நரசோதிப்பட்டி பகுதியைச் சேர்ந்த மாணவர் கவுதம், நீட் தேர்வு அச்சத்தால் தன் இன்னுயிரை மாய்த்துக்கொண்டதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

ஸ்டாலின் மாடல் திமுக ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்து 24வது மாணவர் நீட் தேர்வால் உயிரிழப்பு! ஒரு பொய்யின் விளைவு என்ன என்பதை இப்போதாவது ஸ்டாலின் உணர்வாரா?

அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே

திமுக ஆட்சி வந்தால் நீட் ஒழிந்துவிடும் என இந்த டம்மி அப்பாவும், அவர் மகனும் கூறிய அத்தனையும் பொய்! பொய்! பொய்! ஊழல் செய்யவும், கொள்ளையடித்த பணத்தைக் காப்பாற்றவும், ED ரெய்டுக்கு பயந்து "தம்பி"யை தப்பிக்க வைக்கவுமே இவர்களுக்கு நேரம் சரியாக இருக்கிறது. (#யார்_அந்த_தம்பி?) இவர்களா நீட் ரத்து செய்யப்போகிறார்கள்? அத்தனையும் நாடகம்! திமுகவின் நாடகத்திற்கு நீங்கள் பலியாக வேண்டாம்!

ஒரு முறை, ஒரே ஒரு முறை, உங்கள் பெற்றோர்களைப் பற்றி சிந்தித்து பாருங்கள். அவர்களுக்கு நீங்கள் தான் உலகமே. அவர்களை விட்டுச் செல்ல ஒருபோதும் நினைக்காதீர்கள்.

இந்த உலகில் எத்தனையோ வாய்ப்புகள் இருக்கின்றன. உங்களுக்காக பல்வேறு கதவுகள் திறந்துள்ளன. அவைகளை கண்டறிந்து முன்னேறுங்கள். NEVER EVER GIVE UP! தம்பி கவுதமின் பெற்றோருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்டாலின் அவர்களே வெட்டியாக எடுக்கும் உங்கள் போட்டோஷூட்டை நீட் மாணவர்களுக்காக ஒருமுறை எடுத்து, அவர்களிடம் நீங்கள் சொன்ன பொய்க்காக பகிரங்க மன்னிப்பு கேளுங்கள்!" என வலியுறுத்தியுள்ளார்.

## போலீஸார் தொந்தரவு கொடுப்பதாக ஆணையர் அலுவலகத்தில் தீக்குளிக்க முயன்ற பெண்



சென்னை: மே.21-

போலீஸார் தொந்தரவு கொடுப்பதாகக் கூறி காவல் ஆணையர் அலுவலகத்தில் தீக்குளிக்க முயன்ற பெண்ணால் பரபரப்பு ஏற்பட்டது. சென்னை காவல் ஆணையர் அலுவலகத்துக்கு நேற்று காலை பெண் ஒருவர் கணவர் மற்றும் 2 பிள்ளைகளுடன் வந்தார்.

வந்தவர் திடீரென மறைத்து வைத்திருந்த 'பிளாஸ்க்கை' திறந்து அதில் இருந்த மண்ணெண்ணெயை தலையில் ஊற்றி தீ வைத்துக் கொள்ள முயன்றார். இதைக் கண்டு அங்கு பாதுகாப்பு பணியிலிருந்த போலீஸார் அதிர்ச்சி அடைந்தனர். உடனடியாக, அவரை தடுத்து நிறுத்தினர்.

தகவல் அறிந்து வேப்பேரி போலீஸார் வந்து அந்தப் பெண்ணை காவல் நிலையம் அழைத்துச் சென்றனர். முன்னதாக அப்பெண் செய்தியாளர்களிடம் கூறியதாவது: வியாசர்பாடியில் குடும்பத்துடன் வசிக்கிறேன். எனது வீட்டுக்கு 2 போலீஸார் அடிக்கடி வந்து தொந்தரவு கொடுக்கின்றனர். எனது கணவர் மீது ஏற்கெனவே கஞ்சா வழக்கு உள்ளது. மீண்டும் கஞ்சா வழக்கு போட முயற்சிக்கிறார்கள். இரவு நேரத்தில் கூட வந்து கதவை தட்டுகின்றனர். இதுதொடர்பாக, வியாசர்பாடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் எந்த பலனும் இல்லை.

எனது கணவர் ஆட்டோ ஓட்டுகிறார். மகனும், மகளும் பள்ளியில் படிக்கின்றனர். போலீஸார் வீட்டுக்கு வந்து அடிக்கடி விசாரிப்பதால், குழந்தைகளின் எதிர்காலம் பாழாகிறது. அவர்களால் ஒழுங்காக படிக்க முடியவில்லை. இதுதொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார். இதுதொடர்பாக புகார் மனு கொடுக்கும் படியும், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் போலீஸ் அதிகாரிகள் அறிவுறுத்தினர்.

## கவுரவ விரிவுரையாளர்களுக்கான சம்பள விவகாரம் : திமுக அரசுக்கு ஓபிஎஸ் கண்டனம்



சென்னை, மே.21-

அரசு கல்லூரிகளில் பணியாற்றும் கவுரவ விரிவுரையாளர்களுக்கான நீதிமன்ற ஆணையை செயல்படுத்தாத திமுக அரசுக்கு முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: "கடந்த இருபது ஆண்டு காலமாக தமிழ்நாட்டில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு உயர் கல்வியை போதித்து வருபவர்கள் கவுரவ விரிவுரையாளர்கள். உயர் கல்வியின் உயிர் நாடியாக விளங்கிக் கொண்டிருக்கும் கவுரவ விரிவுரையாளர்களுக்கு உரிய ஊதியம் அளிக்காத அவல நிலை நிலவுகிறது.

பல்கலைக் கழக மானியக் குழுவின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, கவுரவ விரிவுரையாளர்களுக்கு மாதம் 57,500 ரூபாய் ஊதியம் 12 மாதங்களுக்கு வழங்கப்பட வேண்டும். இதனை திமுக அரசு செயல்படுத்தாத நிலையில், இது குறித்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு, இதனைச் செயல்படுத்த நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இருப்பினும், இதுநாள் வரை நீதிமன்ற உத்தரவு செயல்படுத்தப்படவில்லை.

இந்தச் சூழ்நிலையில், கல்லூரிக் கல்வி ஆணையர் மேற்படி வழக்கினை தொடுத்தவருக்கு எழுதியுள்ள கடிதத்தில், பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரையின்படி கவுரவ விரிவுரையாளர்கள் நியமிக்கப்படவில்லை என்று தெரிவித்து, 12 மாதங்களுக்கு சம்பளம் வழங்க முடியாது என்று தெரிவித்துள்ளார். இது, பல்கலைக் கழக மானியக் குழுவின் வழிகாட்டு நெறிமுறைகளுக்கும், நீதிமன்ற உத்தரவிற்கும் எதிரானது.

கவுரவ விரிவுரையாளர்கள் எந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டார்கள் என்று தெரிந்து தான் அவர்களுக்கான ஊதியம் குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை பல்கலைக்கழக மானியக் குழு வெளியிட்டது என்பதையும், இதன் அடிப்படையில் தான் சென்னை உயர் நீதிமன்றமும் உத்தரவிட்டது என்பதையும் இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எனவே, பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரையின்படி கவுரவ விரிவுரையாளர்கள் நியமிக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டி மே மாத சம்பளத்தை வழங்க இயலாது என்று கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவிப்பது பொருத்தமற்றது. கொடுப்பதும் குறைந்த சம்பளம், அதுவும் ஒரு மாதத்திற்கு கிடையாது என்று தெரிவிப்பது இயற்கை நியதிக்கு முரணான செயல் ஆகும்.

முதல்வர், இதில் உடனடியாகத் தலையிட்டு, கவுரவ விரிவுரையாளர்களுக்கான மே மாத சம்பளத்தை வழங்கவும், பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரைப்படி ஊதியத்தை அளிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்" என்று ஓபிஎஸ் கூறியுள்ளார்.



## வேலூர் பள்ளி கொண்டாவில் திறன் மேம்பாட்டு கழகம் சார்பில் கல்லூரிக் கனவு வழிகாட்டி நிகழ்ச்சி

வேலூர், மே.21-

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தாலுகா, பள்ளிகொண்டா, சிஷா கேந்திரா தனியார் பள்ளியில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் கல்லூரிக் கனவு 2025 வழிகாட்டி நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி தொடங்கி வைத்து, மாணவ, மாணவிகளுக்கு உயர்க்கல்வி வழிகாட்டி கையேட்டினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) தயாளன், மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் மதுசெழியன், திறன் மேம்பாட்டு கழக உதவி இயக்குநர் காயத்ரி, மாவட்ட கல்வி அலுவலர்கள் ரமேஷ்பாபு (தனியார் பள்ளிகள்), சத்யபிரபா, மக்கள் பிரதிநிதிகள் பாபு, பாஸ்கரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பழனியில் சித்த மருத்துவர் சாதனை ஆணின் சிறுநீர் குழாயில் இருந்த கல்லை அறுவை சிகிச்சை இல்லாமல் அகற்றி சாதனை

திண்டுக்கல், மே.21-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் சித்தர் புலிப்பாணி பரம்பரையாக வழிவந்த மருத்துவர்கள் பன்னீர்செல்வம் மற்றும் கல்பனா ஆகியோர் புலிப்பாணி சித்தர் பெயரில் சித்த வைத்திய சாலை நடத்தி வருகின்றனர்.

முன்னதாக இவர்களின் புலிப்பாணி சித்த வைத்தியசாலை பற்றி அறிந்த தேனியை சேர்ந்த ஆனந்த் என்பவர், சிறுநீர் குழாயில் கல் அடைப்பு ஏற்பட்டதால் பல மாதங்களாக வலியினால் துன்பப்பட்டு வருவதாக கூறி பன்னீர்செல்வம் மருத்துவரை அணுகினார்.

இதனிடையே ஆனந்த் சில மருத்துவமனைகளில் இதற்காக மருத்துவம் பார்த்தும் சரியாகவில்லை எனவும் மருத்துவரிடம் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து மருத்துவர் பன்னீர்செல்வம் சித்த மருத்துவ முறைப்படி மருந்துகளை ஆனந்திற்கு வழங்கினார்.

தொடர்ந்து ஆனந்த் மருந்து எடுத்துக் கொண்ட சில நாட்களிலேயே சிறுநீரக குழாயில் இருந்து கல், எந்த அறுவை சிகிச்சை இல்லாமல் தானாக




வெளியே வந்தது.

இதனால் மருத்துவம் எடுத்துக்கொண்ட தேனியை சேர்ந்த ஆனந்த் மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்

மேலும் இதற்கு முன்னாள் பார்த்த மருத்துவமனையில் பல லட்சங்கள் செலவாகும் என கூறிய நிலையில் மிக குறைந்த செலவில் உடல் ஆரோக்கியம் பெற்றது மிகவும் மகிழ்ச்சி அடைந்ததாகவும் ஆனந்த் தெரிவித்தார்.

இந்த சிகிச்சை பற்றி மருத்துவர்கள் கூறுகையில் சுமார் 150 மில்லி மீட்டர் (1.5 சென்டி மீட்டர்) அளவுள்ள இந்த கல்லை எந்த அறுவை சிகிச்சையும் வலியும் இல்லாமல் சித்த மருத்துவத்தின் மூலம் அகற்றப்பட்டது. இதுபோல் பல வியாதிகளுக்கும் சித்த மருத்துவம் சிறந்த மருத்துவமாக உள்ளது என பெருமையுடன் தெரிவித்தனர்.



## சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 14 பயனாளிகளுக்கு தலா ரூ.1200 வீதம் உதவித்தொகை பெற ஆணைகள்: கலெக்டர் வழங்கினார்

ஊட்டி, மே.21-

ஊட்டியில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 14 பயனாளிகளுக்கு தலா ரூ.1200 வீதம் உதவித்தொகை பெறுவதற்கான அனுமதி ஆணைகளை மாவட்ட கலெக்டர் வழங்கினார்.

ஊட்டியில் உள்ள மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடந்தது.

கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா, முதியோர், விதவை, கல்வி உதவித்தொகை, வங்கி கடன், குடிசை மாற்று வாரிய வீடு, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 110 மனுக்களை கலெக்டர் பெற்றுக் கொண்டார்.

பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் நீலகிரி மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்கத்தின் உறுப்பினர்கள் மூலம் வசூலிக்கப்பட்ட நன்கொடைகள் அதற்கு தமிழ்நாடு அரசால் 1:2 என்ற விகிதத்தில் வழங்கப்படும் இணை மானிய தொகை ஆகிய ஒருங்கிணைந்த தொகையில் இருந்து 3 பயனாளிகளுக்கு ரூ.50 ஆயிரத்திற்கான காசோலைகளை கலெக்டர் வழங்கினார்.

மேலும் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 14 பயனாளிகளுக்கு தலா ரூ.1200 வீதம் உதவித்தொகை பெறுவதற்கான அனுமதி ஆணை, வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் இணை மானிய திட்டத்தின் கீழ் 30 சதவீத மானியத்தில் வர்க்கி தொழில் துவங்க கூக்கல்தொரை பகுதியை சேர்ந்த அம்பிகா என்பவருக்கு ரூ.7 லட்சத்து 3 ஆயிரத்து 280 மதிப்பில் காசோலை, உபதலை பகுதியை சேர்ந்த லீலா என்பவருக்கு ரூ.5 லட்சத்து 99 ஆயிரத்து 86க்கான காசோலையையும் வழங்கினார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) ராதாகிருஷ்ணன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் சுரேஷ் கண்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) கண்ணன், மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், வாழ்ந்து காட்டுவோம் திட்ட அலுவலர் வசந்த் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சுகாதார சீர்கேட்டால் சீரழியும் புளியங்குடி நகராட்சி தூங்கிக் கொண்டிருக்கும் நகராட்சி நிர்வாகம்

தென்காசி, மே.21-

தென்காசி மாவட்டம் புளியங்குடி நகராட்சியில் நகராட்சி நிர்வாகத்தின் தூக்கத்தால் நகரின் சுற்றுப்புற சுகாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது எவ்வித பாதுகாப்பு உபகரணங்கள் வழங்காமல் துப்புரவு பணியாளர்களை கைகளால் கழிவு நீராடைக்குள் இறங்கச் சொல்லி பணி செய்ய வைத்த அவலமும் அதனால் மனம் உடைந்த தொழிலாளர்கள் புகார் செய்தும் நகராட்சி நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் கடந்த சில மாதங்களாகவே நகராட்சியின் சுகாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது இது பற்றிய விவரமாவது. தென்காசி மாவட்டத்தில் தமிழகத்தில் புவிசார் குறியீடு பெற்றுள்ள எலுமிச்சை பழத்திற்கான சந்தை உள்ளது லெமன் சிட்டி என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்படும் புளியங்குடி நகராட்சியின் சுகாதாரம் கேள்விக் குறியாகி உள்ளூர் வியாபாரிகள் முதல் வெளியூரிலிருந்து வந்து செல்லும் பயணிகள் வரை அனைவரையும் முகம் சுளிக்க வைத்துள்ளது மிக சொற்ப அளவிலான நிரந்தர துப்புரவு பணியாளர்கள் வாருகால் அகற்றும் பணியுடன் பசுமை மையம் நுண் உரக்குடில் பணிகளை கவனிப்பதால் மிகுந்த மன உளைச்சலில் இருந்து வருகின்றனர் இந்த தொழிலாளர்களுக்கு நகராட்சி சுகாதாரத்துறை மூலம் எந்தவித பாதுகாப்பு




உபகரணங்கள் எதுவும் வழங்காமல் கழிவு நீர் ஓடைக்குள் இறங்கி கைகளால் சுத்தம் செய்து வைத்த நிகழ்வு சமூக வலைத்தளங்கள் மூலம் தமிழக முழுவதும் வைரலாகியது அதற்கு காரணமான சுகாதார ஆய்வாளர் மற்றும் மேஸ்திரிகள் மீது இது நாள் வரை மண்டல நகராட்சி நிர்வாக இயக்குனரோ மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எந்தவித நடவடிக்கையும் எடுக்காததால் துப்புரவு பணியாளர்கள் மனம் நொந்து போய் உள்ளனர் கொல்லம் மதுரை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள புளியங்குடி நகராட்சியின் பரப்பளவு நாளுக்கு நாள் விரிவடைந்து கொண்டே இருக்கிறது தற்போது 33 வார்டுகள் கொண்ட நகராட்சியில் துப்புரவு பணிகளுக்காக தனியாருக்கு டெண்டர் விடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது தனியார் துப்புரவு பணியாளர் நிறுவனமோ போதிய ஊழியர்களை சுமார் 150 பேர் பணியாளர்கள் பணி செய்ய வேண்டி உள்ள நிலையில் மிக சொற்ப அளவிலான ஊழியர்களை வைத்துக்கொண்டு நகரத்தை நாரடித்து வருகின்றனர் இதை மேற்பார்வை செய்யும் சுகாதார ஆய்வாளரோ கண்டும் காணாமல் இருந்து வருகிறார் நிரந்தர துப்புரவு பணியாளர்களை மனிதர்களாகவே ஏற்றுக்கொள்ளாத இந்த நகராட்சி நிர்வாகம் தனியார் துப்புரவு நிறுவனம் தரும் அன்பளிப்புக்காக அவர்களை கண்டு கொள்வது கிடையாது தனியார் துப்புரவு பணியாளர்களின் பற்றாக்குறையால் தரம் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டிய குப்பைகளை எரியூட்டி வருகின்றனர் குப்பை கிடங்கில் இருந்து தினசரி குப்பைகளை எரியூட்டுவதால் சுற்றுப்புற சுகாதார சீர்காளுடன் பொதுமக்களுக்கு மூச்சுத் திணறல் மற்றும் தொற்று நோய்களும் ஏற்பட்டு வருகிறது தனியார் துப்புரவு பணி நிறுவனம் குப்பைகளை தரம் பிரித்து மக்கும் குப்பை மக்காத குப்பை திடக்கழிவு என பிரித்து கொடுக்க வேண்டும் அந்தப் பணிகளை செய்யாததால் ஒட்டுமொத்தமாக நகராட்சி குப்பை கிடங்குகளில் எரித்து விடுகின்றனர் இது தொடர் கதையாக இருப்பதால் சுற்றி உள்ள மக்களுக்கு அடிக்கடி மூச்சு திணறல் மற்றும் கைகால் வீக்கம் போன்ற தொற்று நோய்களும் ஏற்பட்டு வருகிறது இதையெல்லாம் கண்காணிக்க வேண்டிய நகராட்சி சுகாதாரத்துறை ஆய்வாளர் தனக்கென என்று இருந்து வருகிறார் மேஸ்திரிகளும் நிரந்தர பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் எதுவும் வழங்காமல் கழிவுநீருடைக்குள் இறங்கி சுத்தம் செய்து வைத்த விவகாரத்தால் பஞ்சாயத்து செய்கிறேன் என்று மேஸ்திரிகளின் சங்கத் தலைவர் வருகை புரிந்து அவருக்கு ரொக்கமாகவும் ஜீ பே மூலமாகவும் அன்பளிப்பு வழங்கி உள்ள விவகாரம் தற்போது விசுவரூபம் ஆகி வருகிறது இந்நிலையில் இது குறித்து புளியங்குடி நகராட்சி நிர்வாகம் திருநெல்வேலி மண்டல நகராட்சி நிர்வாக இயக்குனரோ தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோ எதுவுமே கண்டுகொள்ளாததால் துப்புரவு பணியாளர்களின் எதிர்கால வாழ்க்கை கேள்விக்குறியாகி உள்ளது தொடர்ந்து பொதுமக்களை காக்கும் வண்ணம் குப்பை கிடங்குகளில் இருந்து குப்பைகளை தரம் பிரித்து வழங்குவதற்கு எப்போதுமான தொழிலாளர்களை நியமிப்பதோடு இனிவரும் காலங்களில் குப்பைகளை எரிக்க கூடாது எனவும் ஏற்கனவே அநீதி இழைக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களுக்கு போதிய பாதுகாப்பும் தேவையான உபகரணங்கள் கையுறை போன்றவை வழங்க வேண்டும் எனவும் இந்நிகழ்ச்சிகளுக்கு காரணமாய் இருந்த சுகாதார ஆய்வாளர் மற்றும் மேஸ்திரிகளை பணியிட மாற்றம் செய்ய வேண்டுமென சமூக ஆர்வலர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர் தற்போது குப்பை கிடங்குகளில் இருந்து எரியும் குப்பைகளால் ஏற்படும் இன்னல்களை உடனடியாக முடிவுக்கு கொண்டு வர நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

## பள்ளி திறக்கும் முதல் நாளில் புத்தகம் தர நடவடிக்கை: தமிழ்நாடு பாடநூல் கழகம்

சென்னை, மே.21-

கோடை விடுமுறை முடிந்து பள்ளி திறக்கும் முதல் நாளிலேயே மாணவர்களுக்கு புத்தகம் தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு பாடநூல் கழகம் தெரிவித்துள்ளது. அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு புத்தகங்கள் அனுப்பப்பட்டு வருகிறது. ஜூன் 2ம் தேதி திட்டமிட்டபடி பள்ளிகள் திறக்கப்படும்.

202526ம் கல்வியாண்டிற்கு தேவையான 99% புத்தகங்கள் அச்சிடப்பட்டு தயார்நிலையில் உள்ளன. 4.16 கோடி புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்க தயார் நிலையில் உள்ளன. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு முன்னதாகவே பாடப்புத்தகங்கள் முழுமையாக வழங்கப்படும் என தமிழ்நாடு பாடநூல் கழகம் அறிவித்துள்ளது. தற்போது அனைத்து மாவட்டக் கல்வி அலுவலக விநியோக மையங்களுக்கும் பாடநூல் கழகம் தேவையான உபகரணங்களை அனுப்பியுள்ளது. மாவட்ட விநியோக மையங்களில் பெறப்பட்டுள்ள பாடநூல்கள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் இதர கல்வி உபகரணங்கள் அனைத்தும் பள்ளி திறப்பதற்கு முன்பாகவே பள்ளிகளுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். கோடை விடுமுறை முடிந்து பள்ளி திறக்கும் முதல் நாளில் மாணவர்களுக்கு பாடநூல்கள், கல்வி உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும். இதில் எவ்வித காலதாமதமும் ஏற்படாதவாறு உரிய நடவடிக்கைகளை அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் தமிழ்நாடு பாடநூல் கழகம் தெரிவித்துள்ளது.

## பொது விநியோக திட்டத்திற்காக கோவைக்கு 1500 மெ.டன் அரிசி ரயில் மூலம் அனுப்பிவைப்பு

திருவாரூர், மே.21-

திருவாரூர் ரயில் நிலையத்திலிருந்து கோவை மாவட்டத்தின் பொது விநியோக திட்டத்திற்காக ரயில் மூலம் நேற்று 2 ஆயிரத்து 500 மெ.டன் அரிசி மூட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டன. தமிழகத்தின் உணவு உற்பத்தியில் டெல்டா மாவட்டங்கள் முக்கிய பங்கு வகித்து வருகின்றன. இதில் குறிப்பாக நெல் உற்பத்தியானது 90 சதவிகித அளவில் நடைபெற்று வருகிறது. இதனையொட்டி, திருவாரூர் மாவட்டத்தில் குறுவை மற்றும் சம்பா என மொத்தம் 5 லட்சம் ஏக்கரில் சாகுபடி பணியினை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் நடப்பு பருவத்திற்காக கடந்த ஜனவரி மாதம் முதல் தற்போது வரையில் 5 லட்சத்து 20 ஆயிரம் மெ.டன் சம்பா நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட நெல்கள் அனைத்தும் 40 கிலோ எடை கொண்ட மூட்டைகளாக கட்டப்பட்டு மாவட்டம் முழுவதும் உள்ள நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு சொந்தமான கிடங்குகளில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

மேலும் இவைகளிலிருந்து தினந்தோறும் சுமார் ஆயிரம் டன் அளவில் மாவட்டம் முழுவதும் உள்ள 26 நவீன அரிசி ஆலைகளுக்கு லாரிகள் மூலம் கொண்டு செல்லப்பட்டு அரிசியாக அரைக்கப்படும் பணிகளும் நடைபெற்று வரும் நிலையில் வெளி மாவட்டங்களின் பொது விநியோக திட்டத்திற்காகவும் அரிசி மற்றும் நெல்கள் திருவாரூர், நீடாமங்கலம், திருத்துறைபூண்டி, மன்னார்குடி மற்றும் பேரளம் ரயில் நிலையங்களிருந்து சரக்கு ரயில் மூலம் அனுப்பும் பணியும் நடைபெற்று வருகிறது. அதன்படி நேற்று கோவை மாவட்டத்தின் பொது விநியோக திட்டத்திற்காக ரயில் மூலம் 42 வேகன்களில் 2 ஆயிரத்து 500 மெ.டன் அரிசி மூட்டைகளை அனுப்பும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டனர்.

## ஜெயலலிதாவிற்கு கோடநாட்டில் மணி மண்டபம் திமுக தடை சசிகலா பரபரப்பு புகார்

கோத்தகிரி, மே.21-

கோத்தகிரியில் உள்ள கோடநாடு எஸ்டேட்டிற்கு முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் தோழியும், கோடநாடு எஸ்டேட்டின் பங்குதாரருமான சசிகலா நேற்று வந்த இவர் மூன்று நாட்கள் கோடநாட்டில் ஓய்வெடுப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.



மேலும் முன்னாள் முதலர்வர் ஜெயலலிதா இறந்த பிறகு இரண்டாவது முறையாக வந்துள்ளார்.

கோடநாடு எஸ்டேட்டில் சசிகலாவை வரவேற்க எஸ்டேட் தொழிலாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் வரவேற்பு அளித்தனர்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

கோடநாட்டில் ஜெயலலிதாவிற்கு மணி மண்டபம் கட்ட திமுக அரசு அனுமதி மறுத்துள்ளது., 2026 ல் நிச்சயமாக அம்மா ஆட்சி அமைந்ததும் கோடநாட்டில் மணி மண்டபம் அமைக்கப்பட்டு எல்லா மக்களும் பார்க்கும்படி செய்யப்படும்.இதற்காக நீதிமன்றத்தை நாடுவது குறித்து வழக்கறிஞர்களிடம் கலந்தாலோசித்து முடிவு செய்யப்படும் எனவும்,மக்களிடம் அதிக வரியை வசூலிப்பதில் முனைப்பாக உள்ளார்கள், அரசிடம் இருந்து மக்களுக்கு ஒன்றும் கிடைப்பதில்லை,

இந்த நிலை மாறவேண்டும். என்றால் அம்மாவின் ஆட்சியை நான் கொண்டு வருவேன் அதிமுகவினை இணைக்கும் பணியில் தான் ஈடுபட்டு கொண்டு இருப்பதாவும் 2026 அம்மாவின் ஆட்சி அமைத்து திமுகவிற்கு மக்களை கொண்டு பாடம் புகட்ட செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.



## அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி திருக்கோயில் 7ஆம் ஆண்டு சித்திரை உற்சவ திருவிழா

மாடம்பாக்கம், மே.21-

செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரி அடுத்த மாடம்பாக்கம் ஊராட்சியில் உள்ள அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி திருக்கோயில் டிரஸ்ட் சார்பாக நடைபெற்ற 7ஆம் ஆண்டு சித்திரை திருவிழா உற்சவம் வெகு விமர்சையாக நடைபெற்றது. காஞ்சிபுரம் மாவட்டம் மாடம்பாக்கம் ஊராட்சியில் மறைந்த ஊராட்சி மன்ற தலைவர் வெங்கடேசன் அவர்களின் சகோதரர் 2வது வார்டு கவுன்சிலர் விமலா ஏழுமலை, ரஜினி ஜோசப் கோவிந்தசாமி ஸ்ரீகாந்த் சுப்பிரமணி மைக்கேல் ராஜ் ஆகியோர் விழாவில் கலந்துகொண்டு அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மனை தரிசனம் செய்து அவருடைய திருவருளை பெற்றனர். கோவில் நிர்வாகம் சார்பாக அனைவருக்கும் மாலை அணிவித்து பிரசாதம் வழங்கப்பட்டது. இவ்விழாவில் சுற்றுவட்டார பகுதியில் இருந்து ஏராளமானோர் கலந்துகொண்டு அம்மனை தரிசனம் செய்தனர். மறைந்த ஊராட்சி மன்ற தலைவர் வெங்கடேசன் அவர்களின் சகோதரர் ஏழுமலை விழாவில் கலந்துகலந்து கொண்ட பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கினார்.



## வாராந்திர மக்கள் குறைதீர்வு கூட்டம் 14 மாற்றுத்திறனாளிகளுக்கு நவீன செயற்கை கால்கள் வழங்கினார்

திருவண்ணாமலை, மே.21-

திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில் நடந்த குறைதீர்வு கூட்டத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்களை கலெக்டர் தர்ப்பகராஜ் வழங்கினார்.

திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில், வாராந்திர மக்கள் குறைதீர்வு கூட்டம் கலெக்டர் தர்ப்பகராஜ் தலை மையில் நேற்று நடந்தது.

அதில் டிஆர்ஓ ராம்பிரதீபன், ஆர்டிஒ ராஜ் குமார் உள்பட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர். குறைதீர்வு கூட்டத்தில், சுய தொழில் கடனுதவி முதியோர் உதவித்தொகை, பட்டா மாற்றம், சாலை வசதி, அரசு நலத்திட்ட உதவிகள், மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 458 பேர் மனு அளித்தனர்.

பொதுமக்கள் அளித்த கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட கலெக்டர், அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். குறைதீர்வு கூட்டத்தில் பெறப்படும் அனைத்து மனுக்களுக்கும், உரிய பதில் அளிக்க வேண்டும், நிராகரிக்கப்படும் மனுக்களான காரணங்களை தெரிவிப்பது அவசியம் என்றும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிலையில், கடந்த வாரங்களில் நடந்த குறைதீர்வு கூட்டங்களில், உதவி உபகரணங்கள் கேட்டு விண்ணப்பித்திருந்த 14 நபர்களுக்கு, முதல்வரின் மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் 12.11 லட்சத்தில் நவீன செயற்கை கால்களை, கலெக்டர் தர்ப்பகராஜ் வழங்கினார்.

மேலும், மாற்றுத்திறனாளிகள் கோரிக்கைகள் மீது தனி கவனம் செலுத்த வேண்டும் என உத்தரவிட்டார். அப்போது, மாவட்ட மறுவாழ்வு அலுவலர் செந்தில்குமாரி, இளநிலை மறுவாழ்வு அலுவலர் சூர்யா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

மேலும், மாவட்டம் முழுவதும் தாலுகா அலுவலகங்களில் ஜமாபந்தி நடைபெறும். வழக்கம் போல கலெக்டர் அலுவலகத்தில் தடையின்றி வாராந்திர மக்கள் குறைதீர்வு கூட்டம் நடந்தது குறிப்பிடத்தக்கது.

படிப்படியாக வீடுகள் வழங்கப்படும்

திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில் நடந்த வாராந்திர குறைதீர்வு கூட்டத்தில் பெரும்பாலான மனுக்கள் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் வீடுகள் கேட்டு மனு அளித்தனர். இது தொடர்பாக, நடப்பு நிதி ஆண்டுக்கு ஏற்கனவே பயனாளிகள் பட்டியல் தயாரிக்கப்பட்டு வீடுகட்ட ஆணை வழங்கியிருப்பதாகவும், தகுதியின் அடிப்படையில் குடிசை வீடாக உள்ள அனைவருக்கும் இத்திட்டத்தில் படிப்படியாக வீடுகள் வழங்கப்படும் என கலெக்டர் தர்ப்பகராஜ் தெரிவித்தார்.

## ஜூலை 7ல் கும்பாபிஷேகம்; திருச்செந்தூர் கோயிலில் யாகசாலை முகூர்த்த கால் நடும் விழா

திருச்செந்தூர், மே.21-

தமிழ்க்கடவுள் முருகனின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் கோயிலில் ஜூலை 7ம்தேதி மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. கும்பாபிஷேகத்துக்கான யாகசாலை பூஜைகள் வருகின்ற ஜூலை 1ம்தேதி தொடங்கி நடைபெற உள்ளது. முதற்கட்டமாக நேற்று காலை சண்முகருக்கு யாகசாலைகள் அமைப்பதற்காக பூமிபூஜை, முகூர்த்தக் கால் நடும் விழா நடந்தது. இதனை முன்னிட்டு அதிகாலை 4 மணிக்கு கோயில் நடை திறக்கப்பட்டு, 4.30 மணிக்கு விஸ்வரூபம், 5 மணிக்கு உதயமார்த்தாண்ட அபிஷேகமும், தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடந்தது. ராஜகோபுரம் மேலவாசல் அருகே யாகசாலை அமைக்கப்பட உள்ள இடத்தில் பூஜை செய்யப்பட்ட முகூர்த்தக் கால் நடப்பட்டது. இதில், அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், கலெக்டர் இளம்பகவத், கோயில் தக்கார் அருள்முருகன், இணை ஆணையர் ஞானசேகரன் உள்ளிட்டோர் முகூர்த்தக் கால் நட்டனர்.

## அரசு ஆர்ட்ஸ் கல்லூரிகளுக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கும் மாணவ, மாணவிகள் ஃபாலோ பண்ண வேண்டிய வழிமுறைகள்: பாடப்பிரிவுகளை தேர்வு செய்வதில் கவனம் தேவை

### உயர்கல்வித்துறை அதிகாரிகள் தகவல்

தேனி, மே.21-

அரசு கலை அறிவியல் கல்லூரிகளுக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கும் மாணவ, மாணவிகள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து உயர்கல்வித்துறை அதிகாரிகள் ஆலோசனை தெரிவித்துள்ளனர். தமிழகத்தில் மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், ராமநாதபுரம், சிவகங்கை உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் சேர்த்து 176 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்படுகின்றன.

இவற்றில் உள்ள 159 பாடப்பிரிவுகளில் ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 345 மாணவ, மாணவியர் சேர்க்கைக்கு மே 27ம் தேதி வரை பிளஸ் 2 தேர்ச்சி பெற்றவர்கள் ஷ்ஷ்ஷ்.மீஸீரீணீஉணீ.வீஸீ என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என உயர்கல்வித்துறை அறிவித்துள்ளது. இந்த பணிகளை மாணவ, மாணவியர் மேற்கொண்டு வருகின்றனர். இதில் பல்வேறு விஷயங்களை மாணவ, மாணவிகள் கவனிக்க வேண்டியது அவசியமாக உள்ளது.

இதுகுறித்து உயர்கல்வித்துறை அதிகாரிகள் கூறியதாவது: அரசு கல்லூரிகளில் பிஏ தமிழ் இலக்கியம் மற்றும் பி.லிட் படிக்க விரும்புவோருக்கான தரவரிசை பட்டியல், தமிழில் அவர்கள் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் தயாரிக்கப்படும்.

இதேபோல் ஆங்கிலம் படிக்க விரும்புவோருக்கான தரவரிசை பட்டியல், அந்த பாடத்தில் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் உருவாகும். இவை தவிர ஏனைய பட்டப்படிப்புகளை படிக்க விரும்புவோருக்கான தர வரிசை பட்டியல், மொழிப்பாடங்கள் தவிர்த்து, பிற பாடங்களில் அவர்கள் பெற்ற மதிப்பெண்களின் கூட்டுத்தொகை அடிப்படையில் தயாராகும்.

இதன் அடிப்படையில் ஜூன் மாதம் கவுன்சிலிங் நடத்தப்பட்டு, ஒவ்வொருவருக்கும் அவருக்கான கல்லூரி மற்றும் பாடப்பிரிவு ஒதுக்கப்படும். ஒருவர் கணிதத்தில் 100 மதிப்பெண் பெற்றுள்ளார் என்பதால், கண்டிப்பாக அவர் விரும்பும் கல்லூரியில் பி.எஸ்சி கணிதம் படிக்க வாய்ப்பு கிடைக்கும் என, கருத முடியாது. ஏனெனில் பிற பாடங்களில் குறைந்த மதிப்பெண் பெற்றிருந்தால், அதில் பின்னடைவு ஏற்படலாம்.

இதே நிலைதான் அனைத்து பாடங்களுக்கும். ஒரு விண்ணப்பத்தில் எத்தனை கல்லூரிகளில் எத்தனை பாடப்பிரிவுகளுக்கு விண்ணப்பிக்கலாம் என்பது இணைய தளத்தில் தெளிவாக தெரிவிக்கப் பட்டுள்ளது. அதனை கவனமுடன் படிக்க வேண்டும். பல்வேறு பாடங்களுக்கு விருப்பத்தின் அடிப்படையில் முன்னுரிமை கொடுக்க வாய்ப்புள்ளது.

இதன்படி ஒரு கல்லூரியில் இயற்பியல் முதல் விருப்பம், வேதியியல் இரண்டாம் விருப்பம், கணிதம் மூன்றாம் விருப்பம், கணினி அறிவியல் நான்காம் விருப்பம் என வரிசையாக தேர்வு செய்யலாம். கல்லூரிகளையும் இதே அடிப்படையில் முடிவு செய்யலாம். கவுன்சிலிங் நடைபெறும்போது முதலில் நீங்கள் விரும்பும் கல்லூரியில் விருப்ப பாடத்தில் வாய்ப்பு நழுவினால், அடுத்த பாடப்பிரிவை தேர்வு செய்யலாம். இல்லாவிடில் இரண்டாவது விருப்பமாக உள்ள கல்லூரியில் விருப்ப பாடத்திலேயே சேரவும் வாய்ப்புள்ளது.

சில அரசு கல்லூரிகளில் ஒரே பாடத்தில் இரு பிரிவுகளில் (பேட்ச்) மாணவர் சேர்க்கை நடைபெறும். (உதாரணமாக ஒரு கல்லூரியில் பிஎஸ்.சி கணிதம் மற்றும் இயற்பியல் பாடங்கள் இரு பிரிவுகளாக நடத்தப்படும்) இதுபோன்ற கல்லூரிகளில் இரு பேட்ச்களுக்கும் விண்ணப்பிக்க வேண்டும்.

ஒரு பேட்சில் மட்டும் விண்ணப்பித்து, உங்களுக்கு முந்தைய மதிப்பெண்ணில் முதல் பேட்ச் முடிந்தால், அடுத்த பேட்சில் நீங்கள் முதலிடத்தில் இருப்பீர்கள். அதுபோல் விண்ணப்பிக்காவிட்டால் அந்த வாய்ப்பு மறுக்கப்படும். உங்களை விட குறைந்த மதிப்பெண் பெற்றவர், இரு பேட்சிலும் விண்ணப்பித்திருந்தால், அவருக்கு இரண்டாவது பிரிவில் கல்லூரியில் சேர்க்கை நடைபெறும். எனவே இதில் கவனம் அவசியம்.

ஆன்லைன் விண்ணப்பத்தின் முடிவில், அதனை சமர்ப்பிக்கும் முன்பாக நீங்கள் விரும்பிய அடிப்படையில் கல்லூரிகள் மற்றும் பாடப்பிரிவுகள் தேர்வு செய்யப்பட்டு உள்ளதா என்பதை, சரிபார்க்க வேண்டும். உங்கள் விண்ணப்பத்தில் ஏற்கனவே விருப்ப கல்லூரிகள் மற்றும் பாடப்பிரிவுகளை முறையாக தேர்வு செய்யாமல் இருந்தால், அதே விண்ணப்பத்தினை மீண்டும் திறந்து அவற்றை சரி செய்யலாம்.

அரசு கல்லூரிகளில் சேர விண்ணப்பிக்க ஆன்லைன் மையத்திற்கு செல்லும்போது உங்கள் பிளஸ் 2 மதிப்பெண் பட்டியல், கணினி வாயிலாக பெற்ற சாதிச்சான்று, ஆதார் கார்டு, பிளஸ் 2 எமிஸ் எண், பெற்றோரின் வருவாய் சான்றிதழ், குடும்பத்தின் முதல் பட்டதாரி என்பதற்கான சான்று, மாற்றுத்திறனாளியாக இருந்தால் ஒன்றிய, மாநில அரசுகளின் அடையாள அட்டை உள்ளிட்டவற்றை கொண்டு செல்ல வேண்டும்.

விண்ணப்பித்த பிறகு ஆன்லைன் மையங்கள் சார்பில் அனைத்து விபரங்களும் அடங்கிய நகல் வழங்கப்படும். இதனை எந்த கல்லூரியிலும் நீங்கள் கொடுக்க வேண்டியதில்லை. கவுன்சிலிங் அழைப்பு வரும்வரை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். இந்த வழிமுறைகளை கவனத்தில் கொண்டு விரும்பிய கல்லூரிகளில் பட்டப்படிப்புக்கான வாய்ப்பு பெற்று வெற்றி பெறலாம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## மே 24 அல்லது 25ம் தேதி தென்மேற்கு பருவமழை தமிழ்நாட்டில் தொடங்கும்

### சென்னை வானிலை மையம் அறிவிப்பு



சென்னை, மே.21-

மே 24 அல்லது 25ம் தேதியே தென்மேற்கு பருவமழை தமிழ்நாட்டில் தொடங்கும் என சென்னை வானிலை மையம் அறிவித்துள்ளது. வரும் 22ம் தேதி அரபிக் கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகும் என்றும், அரபிக் கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி வடக்கு நோக்கி நகர்ந்து வலுப்பெறும் என்றும் சென்னை வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது. கேரளாவில் அடுத்த 4 அல்லது 5 நாட்களில் தென்மேற்கு பருவமழை தொடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென்னையில் வேகமாக மூழ்கும் பகுதி தரமணி: ஆய்வில் தகவல்



சென்னை, மே.21-

சென்னையில் சில பகுதிகள் மூழ்கியுள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது. குறிப்பாக சென்னையில் வேகமாக மூழ்கும் பகுதியாக தரமணி இருப்பதாக என்.டி.யூ கண்டறிந்துள்ளது. சிங்கப்பூரின் நான்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் (என்.டி.யூ) மேற்கொண்ட ஆய்வில், உலகம் முழுவதிலும் கவலைப்படத்தக்க வகையில் வேகமாக மூழ்கி வரும் கடலோர நகரங்கள் குறித்த ஆய்வு ஒன்று வெளியாகியுள்ளது. ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் உள்ள சுமார் 48 நகரங்கள் எந்தளவுக்கு மூழ்கி வருகின்றன என்பது குறித்து ஆய்வுக்குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர். காலநிலை மாற்றத்தால் உந்தப்பட்ட கடல் மட்ட உயர்வால் நிலப்பகுதிகள் மூழ்கும் அபாயம் கொண்ட நகரங்கள் இவை. ஆய்வுகள் மற்றும் ஐ.நா.வின் மக்கள்தொகை தரவுகள் வாயிலாக இந்த பகுதிகளில் கிட்டத்தட்ட 16 கோடி மக்கள் வாழ்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து சென்னை உள்பட 5 நகரங்கள் இந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதில், 2014ம் ஆண்டிலிருந்து 2020ம் ஆண்டு வரை ஆண்டுக்கு சராசரியாக 0.01 செ.மீ 3.7 செ.மீ என்ற அளவில் சென்னையின் சில பகுதிகள் மூழ்கியுள்ளதாக என்.டி.யூ. ஆய்வு தெரிவிக்கிறது. சென்னையில் வேகமாக மூழ்கும் பகுதியாக தரமணி இருப்பதாக என்.டி.யூ கண்டறிந்துள்ளது. அந்த பகுதி ஆண்டுக்கு சராசரியாக 3.7 செ.மீ அளவுக்கு மூழ்குவதாக அந்த ஆய்வு கூறுகிறது. இது 2024ம் ஆண்டில் கடல் மட்டத்தில் ஏற்பட்ட 0.59 செ.மீ உயர்வுடன் ஒப்பிடப்படுகிறது என, நாசாவால் வழிநடத்தப்பட்ட ஆய்வு கூறுகிறது. விவசாயம், தொழில் மற்றும் வீட்டுப் பயன்பாடுகளுக்கு அதிகளவில் நிலத்தடி நீர் உறிஞ்சப்படும் பகுதிகள் வேகமாக மூழ்கிவருவதாக சென்னையில் உள்ள நிபுணர்கள் கூறுகின்றனர்.

இதை தடுக்க நிலத்தடி நீர் மேலாண்மை, நீர்நிலைகளை வரைபடமாக்குதல், சுற்றுச்சூழல் தாக்க அறிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறதா என்பதை உறுதி செய்வதற்காக கட்டுமானங்களை கண்காணித்தல் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு உருவாக்கியுள்ளது. அதேபோல், இந்தியாவில், குஜராத், மும்பை, கொல்கத்தா போன்ற நகரங்கள் மூழ்கி வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## தஞ்சை, கள்ளக்குறிச்சி பகுதிகளில் கன மழை; 5,700 ஏக்கர் எள், உளுந்து நெற் பயிர் நீரில் மூழ்கி சேதம்: வேதாரண்யத்தில் உப்பு உற்பத்தி பாதிப்பு



சென்னை, மே.21-

தஞ்சாவூர் மாவட்டம் அய்யம்பேட்டை அருகே மானாங்கோரை, செட்டிபத்து உள்ளிட்ட கிராமங்களில் கோடை பயிராக நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கரில் உளுந்து மற்றும் எள் பயிரிடப்பட்டுள்ளது. கடந்த சில தினங்களாக பெய்து வரும் தொடர் கனமழை காரணமாக அறுவடைக்கு தயாராக உள்ள உளுந்து மற்றும் எள் பயிர்களில் மழை நீர் தேங்கியுள்ளது. வாய்க்கால்களிலும் மழைநீர் செல்வதால் வயல்களில் தேங்கிய நீரை வடிய வைக்க முடியாமல் விவசாயிகள் சிரமப்பட்டு வருகின்றனர். இதனால் ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் வரை செலவு செய்து சாகுபடி செய்த பயிர்களை அறுவடை செய்ய முடியாமல் முற்றிலுமாக அழுகி வீணாகும் நிலை ஏற்படும் என விவசாயிகள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர். அதேபோல் திருவையாறு சுற்றுவட்டார பகுதியில் 5,000 ஏக்கரில் எள் சாகுபடி செய்திருந்தனர்.

10 நாட்களில் அறுவடைக்கு தயாராக இருந்த எள், பயிறு வகைகள் கனமழையால் நீரில் மூழ்கியது. இது குறித்து விவசாயிகள் கூறும்போது, எள்ளில் வரும் வருமானத்தை வைத்துக்கொண்டு குறுவை சாகுபடி தொடங்க எண்ணியிருந்தோம். அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என்றனர். கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம், தியாகராஜபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் விவசாயிகள் நடவு செய்து அறுவடைக்கு தயாராக இருந்த சுமார் 500 ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கி சேதமடைந்தது. அதேபோல் செஞ்சி மற்றும் அதன் சுற்று வட்டாரத்தில் கடந்த 4 நாட்களாக தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதனால் விவசாயிகள் நவரை பருவத்தில் சுமார் 100 ஏக்கரில் நடவு செய்த நெற்பயிர்களை அறுவடை செய்ய தயாராக இருந்த நிலையில் முற்றிலும் சாய்ந்துள்ளது.

கடலூர் மாவட்டம் விருத்தாசலம் அடுத்த பெண்ணாடம் அருகே சவுந்தரசோழபுரம் கிராமத்தில் உள்ள வெள்ளாற்றில் கடலூர் அரியலூர் மாவட்டத்தை இணைக்கும் வகையில் மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதனால் சவுந்தரசோழபுரத்தில் இருந்து வெள்ளாற்றின் அக்கரையில் உள்ள அரியலூர் மாவட்டம் கோட்டைக்காடு வரை இணைப்பு சாலையாக தற்காலிக மண் பாலம் அமைக்கப்பட்டு இருந்தது. கன மழை காரணமாக வயல்வெளி பகுதியில் உள்ள மழைநீர் வெள்ளாற்றில் வெள்ளப்பெருக்காக வந்தது. இதில் தற்காலிக தரைப்பாலம் அடித்து செல்லப்பட்டு 20க்கும் மேற்பட்ட கிராம மக்கள் 15 கிலோமீட்டர் சுற்றி செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. உப்பு உற்பத்தி பாதிப்பு: நாகை மாவட்டம் வேதாரண்யம் பகுதிகளில் சுமார் 9000 ஏக்கரில் உப்பு உற்பத்தி முழு வீச்சில் நடைபெற்று வந்தது.

இந்நிலையில் நாகை மாவட்டம் வேதாரண்யம் கடற்கரை பகுதியில் கடந்த 3 நாட்களாக சூறைக்காற்று, இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. நேற்று காலை வரை மழை நீடித்தது. இதன் காரணமாக சுமார் 9 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் உப்பு உற்பத்தி நிறுத்தப்பட்டது. கடலூர் மாவட்டம் முஷ்ணம் பகுதியில் குறுவை நெல் இயந்திர நடவு மூலம் பயிர் செய்துள்ளனர். நேற்றுமுன்தினம் இரவு முழுவதும் இப்பகுதியில் மழை பெய்தது. இதில் சுமார் 1000 ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கி சேதமடைந்தது. கரையோர மக்களுக்கு வெள்ள எச்சரிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் கெலவரப்பள்ளி அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான தமிழக மற்றும் கர்நாடக தென்பெண்ணை ஆற்று பகுதிகளில், கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது.

இதனால் கெலவரப்பள்ளி அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் ஒசூரில் 48 மிமீ மழையும், கெலவரப்பள்ளி 90 மிமீ மழை பெய்துள்ளது. இதன் காரணமாக கெலவரப்பள்ளி அணைக்கு நேற்று காலை நீர் வரத்து 904 கனஅடியானது. அணையின் மொத்த கொள்ளளவான 44.28 அடியில், தற்போது 41.98 அடி நீர் உள்ளது. தொடர்ந்து மழை பெய்து வருவதால், அணையின் பாதுகாப்பு கருதி பாசன கால்வாய் மற்றும் தென்பெண்ணை ஆற்றில் விநாடிக்கு 794.43 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால், ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு கரையோர மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## பள்ளிக்கல்வித் துறையில் அமைச்சு பணியாளர் வேலை நேரம் மாற்றம்



பள்ளிகள் மற்றும் பள்ளிக்கல்வித்துறை அலுவலகங்களில் பணியாற்றும் அமைச்சுப் பணியாளர்களின் வேலை நேரம் மீண்டும் காலை 10 முதல் மாலை 5.45 மணி வரை என மாற்றப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பள்ளிக்கல்வித்துறை செயலர் பி.சந்திரமோகன், பள்ளிக்கல்வி இயக்குநர் எஸ்.கண்ணப்பனுக்கு அனுப்பியுள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது: பள்ளிகள் மற்றும் பள்ளிக்கல் வித்துறை அலுவலகங்களில் பணியாற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்களான இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்களின் வேலை நேரம் காலை 9 முதல் மாலை 4.45 மணி வரை என மாற்றி ஆணையிடப்பட்டது. பல்வேறு சங்கங்கள் இந்த ஆணையை ரத்து செய்து ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வந்ததைபோன்று அமைச்சுப் பணியாளர்களுக்கான வேலை நேரத்தை மீண்டும் காலை 10 முதல் மாலை 5.45 மணி வரை என நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனர்.

அத்துடன், அலுவலகம் மற்றும் பள்ளிகளில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்களின் பணிநேரத்தை நிர்வாக நலன் கருதி ஒருங்கிணைக்க வேண்டியுள்ளதாலும் அமைச்சுப் பணியாளர்களின் வேலைநேரத்தை காலை 10 முதல் மாலை 5.45 மணி வரை என மாற்றியமைத்து ஆணை வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

பள்ளிக்கல்வி இயக்குநரின் கோரிக்கை கவனமாக பரிசீலனை செய்யப்பட்டு, பள்ளிகள் மற்றும் பள்ளிக்கல்வித்துறை அலுவலகங்களில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்களின் வேலை நேரம் காலை 10 முதல் மாலை 5.45 மணி வரை என மாற்றியமைக் கப்படுகிறது. இவ்வாறு அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.




# பெருங்களத்தூர் உள்ள ஜி.கேஎம் கல்வி குழுமம் மற்றும் ஸ்ரீ ஐயகிரீவர் செஸ் அகாடமி சார்பில் முதலாவது மாநில அளவிலான சதுரங்க போட்டி

பெருங்களத்தூர், மே.21-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் பெருங்களத்தூரில் உள்ள ஜி.கே.எம் கல்வி குழுமம் மற்றும் ஸ்ரீ ஐயகிரீவர் செஸ் அகாடமி சார்பில் முதலாவது மாநில அளவிலான சதுரங்க போட்டி GKM கல்லூரியில் நடைபெற்றது. சதுரங்க போட்டியில் 8 , 10, 13, 25 வயது கொண்ட ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியே நடைபெற்ற இப்போட்டிகள் மொத்தம் 6 சுற்றுகளாக நடைபெற்றன. செங்கல்பட்டு, சென்னை, காஞ்சிபுரம். திருவள்ளூர், ராணிபேட்டை, வேலூர், கிருஷ்ணகிரி, விழுப்புரம், கடலூர், விருதாசலம், திருச்சி, மதுரை, திருநெல் வேலி என தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் சுமார் 500 க்கும் மேற்பட்ட வீரர்கள் போட்டியில் கலந்து கொண்டனர். சதுரங்க விளையாட்டில் அதிக புள்ளிகள் பெற்று வெற்றி பெற்ற ஒவ்வொரு பிரிவிலும் முதல் 30 இடங்களை பிடித்த வீரர்கள் , வீராங்கனைகள் என மொத்தம் 240 பேர்களுக்கு வெற்றி கோப்பைகளையும் , சான்றிதழ்களையும் ஜி.கே.எம் கல்லூரி முதல்வர் டாக்டர் புவனேஷ்வரி, துணை முதல்வர் டாக்டர் வெங்கடேன் , ஸ்ரீ ஐயகிரீவர் செஸ் அகாடமி நிறுவனர் கோகிலா ராஜேஷ் ஆகியோர் பரிசுகளை வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.

8 வயதுடைய இளம் வீரர்களை ஊக்குவிக்கும் விதமாக அவர்கள் அனைவருக்கும் வெற்றி பதக்கங்கள் வழங்கபட்டன. மேலும் இந்த பரிசளிப்பு விழாவில் பெற்றோர்கள், மாணவர்கள், ஜி.கே.எம். கல்லூரி பேராசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள், செங்கல்பட்டு மாவட்ட சதுரங்க கழக நிர்வாகிகள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

போட்டிக்கான ஏற்பாடுகளை குறிப்பாக பேருந்து , உணவு மற்றும் அடிப்படை வசதிகளை ஜி.கே.எம். கல்லூரி நிர்வாகம் மற்றும் ஸ்ரீ ஐயகிரீவர் செஸ் அகாடமி ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்து இருந்தனர்.





## நிலக்கோட்டை அருகே சித்தர்கள்நத்த கிராமத்தில் நூற்றாண்டு பழமையான

# அருள்மிகு கருமலை அய்யன் மற்றும் பிதரை அம்மன் கோவில் மஹா கும்பாபிஷேக விழாவில் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு அய்யனின் அருள்பெற்று சென்றனர்

நிலக்கோட்டை, மே.21-

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையை அடுத்த வைகை ஆற்றங் கரையில் உள்ள சித்தர்கள்நத்தம் கிராமத்தில் நான்கு மக்கள் குருவி சின்னன் கூட்டத்திற்கு பாத்தியப்பட்ட, நூற்றாண்டு பழமையான அருள்மிகு கருமலை அய்யன் சுவாமி மற்றும் பிதரை அம்மன் கோவில் மகாகும்பாபிஷேக விழா நடைபெற்றது,விழாவில் நேற்று முன்தினம் ஸ்வாமி பெட்டி அழைப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. அதனுடன் பல்வேறு புண்ணிய நதிகளில் இருந்து கொண்டுவரப்பட்ட புனிதநீர் தாரை தப்பட்டை வானவேடிக் கைகள் முழங்க ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு பிரம்மாண்ட யாக சாலையில் வைக்கப்பட்டு சோழவந்தான் பிரதமகுரு ஸ்ரீ பாலமுருகன் சிவாச்சா ரியார்கள் தலைமையில் கணபதி பூஜை, கோபூஜை, ப்ரீத்தி ஹோமம், சுமங்கலிபூஜை, தீபாதாணை உள்ளிட்ட ஐந்துகாலயாக வேள்விகள் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது, உயிரூட்டல் நிகழ்ச்சியுடன் விழாவின் முக்கிய நிகழ்வாக நாகராஜ சுவாமிகள், ரிஷிகே சன்சிவம், க்ருஷ்ணையர் சிவாச்சாரிகள் தலைமையில் வேத மந்திரங்கள் முழங்க கருமலை அய்யனுக்கும் பிதிரை அம்மனுக்கும் பரிவார தெய்வங்களுக்கும் புனித நீர் ஊற்றி மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது, இக்கும்பாபிஷேக விழாவிற்கு திண்டுக்கல் ,மதுரை,தேனி,நெல்லை,கோவை,பெங்களூர் மற்றும் நிலக்கோட்டை, வத்தலக்குண்டு, சோழவந்தான், வாடிப்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர், விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது விழா ஏற்பாடுகளை குரு நான்கு மக்கள், குருவி சின்ன கூட்டத்து வகையராக்கள், விழா கமிட்டியினர் மற்றும் சித்தர்கள்நத்தம் கிராம பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.




# பல்லாவரம் சட்டமன்ற தொகுதி திமுக சார்பில் வாக்குசாவடி நிலை முகவர்கள் (பிஎல்ஏ2) ஆலோசனைக் கூட்டம்

பல்லாவரம், மே.21-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி வாக்கு சாவடி நிலை முகவர்கள் ஆலோசனை கூட்டம் பல்லாவரம் அருள்முருக திருமண மண்டபத்தில் மாவட்ட கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்எல்ஏ தலைமையில் நடைபெற்றது இக் கூட்டத்தில் நாடாளுமன்ற குழு தலைவர் கழக பொருளாளர் டி.ஆர். பாலு, மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரை யாற்றினர் உடன் கழகத் தீர்மான குழு செயலாளர் மீ.அ.வைத்திலிங்கம், மாநகர செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்எல்ஏ, தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், துணை மேயர் கோ. காமராஜ், பல்லாவரம் தொகுதி பார்வையாளர் ரபி அகமத், மண்டல தலைவ ர்கள் வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதி கழகச் செயலாளர்கள் தா.ஜெயக்குமார், இ.எஸ்.பெர்னாட், ஏகே. கருணாகரன், ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி, தமிழ்மாறன், ரஞ்சன், பொன்ராம், எல்.பிரபு, ரவிச்சந்திரன், கோ. ஜானகிராமன், பி.கே. சத்ய பிரபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்






# பழனியில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடம் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட எட்டு பேர் கைது

## இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்து போலீசார் நடவடிக்கை

பழனி, மே.21-

பழனி திண்டுக்கல் பழனியில் பழனி காவல் துணை கண்காணிப்பாளர் தனஜெயன் அதிரடி உத்தரவுண்டேரில் காவல் ஆய்வாளர் மணிமாறன் சார்பாய்வாளர் விஜய் மற்றும் காவலர்கள் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொழுது பழனியாண்டவர் ஆண்கள் கல்லூரி அருகே சந்தேகத்துக்கு இடமாக நின்று கொண்டிருந்த எட்டு பேரை பிடித்து போலீசார் விசாரணை செய்தனர். அப்பொழுது முன்னுக்குப் பின் முரணாக போலீசாரிடம் தகவல் தெரிவித்ததால் எட்டு பேரையும் போலீசார் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை செய்தனர். போலீசாரின் விசாரணையில் புளியம்பட்டியை சேர்ந்த மாதவன், பழனியைச் சேர்ந்த சந்துரு, அஜய்குமார், நாகேந்திரன் உள்ளிட்ட எட்டு பேரும் கஞ்சா விற்பனை செய்துவந்ததும், கல்லூரி மாணவர்களிடம் கஞ்சா விற்பனை செய்ய காத்திருந்ததும் தெரியவந்தது. அவர்களிடம் இருந்து 100 கிராம் கஞ்சா மற்றும் கஞ்சா விற்பனைக்காக பயன்படுத்திய மூன்று இருசக்கர வாகனங்களும் போலீசாரால் பறிமுதல் செய்யப்பட்டது. பிடிபட்ட எட்டு பேர் மீதும் வழக்கு பதிவு செய்த போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர். தொடர்ந்து பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடம் கஞ்சா விற்பனையில் ஈடுபடும் நபர்களை கண்காணித்து வருகின்றன மிக விரைவில் அனைவரும் கைது செய்து சிறையில் அடைக்கப்படும் கஞ்சா விற்பனை செய்யும் இளைஞர்களைப் பற்றி தகவல் கொடுத்தால் காவல்துறை அவரின் தகவல் பாதுகாக்கப்படும் எனக் கூறினர்.





# அஇஅதிமுக பூத் கமிட்டி மறு ஆய்வுக்கூட்டம்

இளையான்குடி, மே.21-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி அஇஅதிமுக பேரூர் கழகம் சார்பில் அஇஅதிமுக பொதுச் செயலாளர், எதிர்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிச்சாமி ஆணைக்கிணங்க பூத் கமிட்டி மறு ஆய்வுக்கூட்டம் பேரூர் கழக செயலாளர் நாகூர் மீரா தலைமையில் அஇஅதிமுக கழக அமைப்பு செயலாளர், சிவகங்கை மாவட்ட பூத்கமிட்டி பொறுப்பாளர் சீனிவாசன் , சிவகங்கை மாவட்டக் கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் பிஆர்.செந்தில் நாதன் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் எஸ்.நாகராஜன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், எம்.குணசேகரன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், சிவதேவ்குமார், மாவட்ட எம்ஜிஆர் மன்ற செயலாளர், கருணாகரன் இளைஞர் அணி துணைச் செயலாளர், சிவகங்கை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏசி.மாரிமுத்து, மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் பாரதிராஜன்,

இளையான்குடி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் சோனை ரவி, திருப்புவனம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் செல்வராஜ், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள் அபுபக்கர், செய்யதுஇபுறாகிம், அபுல்கலாம் ஆசாத், அப்பாஸ்அலி, மீரான்கனி, செய்யதுஅன்சாரி, கலில் அஹமது, திருநாவுக்கரசு, அயுப்கான், சிவக்குமார், செல்வம்,முருகன், அரசேந்திரன், தெய்வேந்திரன், கீழாயூர் செய்யது இப்றாகிம், தாஜ்மைதீன், முகம்மதுமைதீன், அப்துல்கலாம் தஸ்தகீர், புதூர் செய்யது, ஜாவித், நசீம், ரியாசுர் ரஹ்மான், தமீம்அன்சார் அலி, செய்யது அன்சாரி, செல்வக்குமார், சிக்கந்தர் ஹம்சாஅலி, சபீர் அகமது, யாசர் அலி அரபாத், திவான் முகம்மது, சங்கன் என்ற பாலு, இப்ராஹிம்ஷா பைசில் ரஹ்மான், சோலமலை, சபீர் அகமது, லியாஸ் அஹமது, முகம்மதுஆசிக், மற்றும் கழக நிர்வாகிகள் மற்றும் பூத்கமிட்டி பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# நாகர்கோவிலில் செயல்படும் கதர் கிராம தொழில் அலுவலகம் நெல்லைக்கு இடமாற்றம்

## குமரிமாவட்ட ஆதித்தமிழர்கட்சி எதிர்ப்பு

கன்னியாகுமரி, மே.21-

கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் கிராமப்புற தொழில்களை மேம்படுத்திடும் நோக்கத்தில் உதவி இயக்குனர் தலைமையிலான கதர் கிராம தொழில் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இதன்படி குமரி மாவட்ட அலுவலகம் நாகர்கோ விலில் மாவட்ட ஆட்சியாளர் அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வருகிறது.



குமரி மாவட்டத்தில் தேன், மண்பாண்டத் தொழில், சோப்பு, பிரம்பு மூங்கில் பொருட்கள், பாய், சிப்பி மாலை, சுண்ணாம்புத்தொழில் உள்ளிட்ட பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்வோர் கூட்டுறவு சங்கமாக செயல்பட்டு கதர் கிராம தொழில் அலுவலகம் மூலம் கடன் உதவி பெற்று தொழில்களை செய்வதோடு உற்பத்தி செய்யும் பொருட்களை இதன் மூலம் விற்பனை செய்து தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். இந்த அலுவலகத்தின் கீழ் குளச்சல், மார்த்தாண்டம், நாகர்கோவில் உள்ளிட்ட பகுதிகளில் கதர் அங்காடி செயல்படுகிறது.

இந்த அலுவலக வழிகாட்டுதலின் படி நலிவடைந்த நிலையில் இருந்த பல சிறு, குறு தொழில்கள் வளர்ந்து வருகிறது. மண்பாண்ட தொழில், தேனீ வளர்ப்பு தொழில் உள்ளிட்ட பல தொழில்கள் பல ஆயிரம் பேருக்கு வாழ்வாதாரமான நிலையில் தொழிலுக்கு என சுமார் 2 ஆயிரம் பேர் தொழில்கடன் வாங்கி பயன்பெற்று உள்ளனர். மேலும் கைவினை பொருட்கள் உற்ப த்தியிலும், விற்பனையிலும் இந்த அலுவலகம் சாதனை படைத்து வருகிறது.

இந்நிலையில் ஊழியர்கள் பற்றாக் குறை காரணத்தால் தமிழகத்தில் உள்ள 8 அலுவலகங்கள் ஏனைய அலுவலகங்களுடன் இணைக்கப்படுவதாக கூறப்படுகிறது. இதன்படி ஊழியர்கள் இல்லாமல் உள்ள நெல்லை மாவட்ட அலுவலகத்துடன் போதிய ஊழியர்களுடன் சிறப்பாக செயல்பட்டு வரும் குமரி மாவட்ட அலுவலகத்தை இணைக்க முடிவு எடுக்கப்பட்டு உள்ளது. இதைத் தொடர்ந்து குமரி மாவட்ட கதர் கிராம தொழில் அலுவ லகம் இடமாற்றம் செய்யப் படுகிறது.

இதனால் குமரி மாவட்டத்தில் கைவினைத் தொழில்களில் ஈடுபடுவோர் கடுமையான பாதிப்பிற்கு உள்ளாகும் நிலை உள்ளது. தொழில்கடன் பெற்றவர்களும், பெறுபவர்களும் அலைக்கழிப்புக்கு உள்ளாவதுடன் மாவட்டத்தின் கிராம தொழில் உற்பத்தி பின்னடைவை சந்திக்கும் சூழல் ஏற்பட்டு உள்ளது. இத்தகைய இடமாற்றும் நடவடிக்கைக்கு குமரி மாவட்ட ஆதித்தமிழர்கட்சி எதிர்ப்பு தெரிவித்து உள்ளதோடு இத்தகைய முடிவினை கைவிட வேண்டும் என வலியுறுத்தனார்கள்







# தென்காசி இலத்தூர் இ.விலக்கு ரவுண்டானாவில் வரவேற்பு பூங்கா திறப்பு விழா

தென்காசி, மே.21-

தென்காசி அருகே உள்ள இலத்தூர் இ.விலக்கு ரவுண்டானாவில் நெல்லை முடநீக்கியல் மருத்துவர்கள் சங்கம் மற்றும் குற்றா லம் சாரல் ரோட்டரி சங்கம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள வரவேற்பு பூங்காவின் திறப்பு விழா நடைபெற்றது.

இந்த ரவுண்டானா பராமரிப்பு இன்றி புற்கள் மற்றும் புதர்கள் மண்டி கிடந்தன. இதனால் அப்பகுதியில் சாலை விபத்துகள் அதிகமாக நிகழ்ந்து கொண்டு இருக்கிறது. இதனை பசுமை இந்தியா திட்டத்தின் கீழ் நெல்லை முடநீக்கியல் மருத்துவரகள் சங்கம் மற்றும் குற்றாலம் சாரல் ரோட்டரி கிளப் ஹோம்வே பிராப்பர்டீஸ் டிசைனர் இன்டீரியர் சார்பில் பராமரிப்பு செய்து பூஞ் செடிகள் நடப்பட்டு பூங்காவாக மாற்றப் பட்டுள்ளது. இதற்கு வரவேற்பு பூங்கா என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று இலத்தூர் இ.விலக்கு பகுதியில் உள்ள வரவேற்பு பூங்காவின் திறப்பு விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு குற்றாலம் சாரல் ரோட்டரி சங்கத்தின் தலைவர் டாக்டர் டி.ஆர்.எஸ். முத்துராமன் தலைமை தாங்கினார். செயலாளர் திலீப், பொருளாளர் ராமகிருஷ்ணன் என்ற ஜெகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் உதவி ஆளுநர் செல்வகணபதி அனைவரையும் வரவேற்று பேசினார். இந்த விழாவில் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி எலும்பியல் துறை தலைவரும், தமிழ்நாடு முடநீக்கியல் மருத்துவ சங்க தலைவருமான பேராசிரியர் என்.மணிகண்டன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வரவேற்பு பூங்காவை திறந்து வைத்தார்.

இந்த விழாவில் தமிழ்நாடு முடநீக்கியல் மருத்துவ சங்கத்தின் இணை செயலாளர் டாக்டர் எஸ்.மாரிமுத்து. தென்காசி போக்குவரத்து காவல் ஆய்வாளர் எஸ்.எம்.மணி, நெல்லை ஆர்த்தோ கிளப் தலைவர் டாக்டர் ஐவன் சாமுவேல், செயலாளர் டாக்டர் தாமோதரன், டாக்டர் வேதமூர்த்தி டாக்டர் ஜெஸ்லின், நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சீன்ராஜ் ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள். இந்த விழாவில் கோவில்பட்டி டாக்டர் தாமோதரன், தென்காசி டாக்டர் திருமலை குமார், டாக்டர் மது, டாக்டர் பிரபாகரன், மற்றும் ரோட்டரி கிளப் நிர்வாகிகள், மற்றும் உறுப்பினர்கள், ஆய்க்குடி அமர் சேவா சங்கம் சார்பில் சண்முகம், சமூக ஆர்வலர்கள் உட்பட பொதும க்கள் பலர் கலந்து கொண்டனர். முடிவில் சாரல் ரோட்டரி சங்கத்தின் செயலாளர் திலிப் அனைவருக்கும் நன்றி கூறினார். இந்த விழாவி ற்கான ஏற்பாடுகளை குற்றாலம் சாரல் ரோட்டரி சங்கத்தின் தலைவர் டாக்டர் டி.ஆர். எஸ்.முத்து ராமன் தலைமையில் நெல்லை முடநீக்கியல் மருத்துவரகள் சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் குற்றாலம் சாரல் ரோட்டரி சங்கத்தின் நிர்வாகிகள், சிறப்பாக செய்திருந்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,
Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161